விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 05 சனிக்கிழமை (19.05.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 151

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## இரண்டாவது நாளாக நேற்றும் ஓமந்தை சோதனைச்சாவடி மூடல்

### நோயாளர்கள் பரிதவிப்பு

(வவுனியா)

படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஓமந்தை முன்னரங்கப் பிரதேசத்தில் இடம் பெற்ற எறிகணைத் தாக்குதலை அடுத்து நேற்று முன்தினம் மூடப்பட்ட ஓமந்தை வீதி நேற்றும் திறக்கப்படவில்லையென படைத்தரப்பு தெரிவித்துள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக மூடப்பட்ட இப்பாதை எதிர்வரும் சில நாட்களுக்கு திறப்பதற்கான சாத்தியக் கூறு இல்லையென இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஓமந்தை பாதை மூடப்பட்டதனையடுத்து கிளிநொச்சி வைத்தியசாலை நோயாளர்கள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகி வருவதாக வைத்தியசாலை (04 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலமே தீர்வுகாண முடியும்

### சீன அரசு மீண்டும் வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தைகள் மூலமே தீர்வுகாண முடியுமென சீனா மீண்டும் வலியுறுத்தியுள்ளது. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச திணைக்கள அமைச்சர் சம்சியாரே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து உரையாடிய போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இராணுவ நடவடிக்கைகள் மூலம் இவ் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என தெரிவித்த அவர் இவ் விடயம் தொடர்பில் சீனாவிற்கு கடந்த கால அனுபவம் அதிகமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கையி (04 ஆம் பக்கம் பார்க்க)

# இடம் பெயர்ந்த மக்களை அரசாங்கம் பலவந்தமாக மீளக்குடியேற்றுகிறது

## ஐ.நா.குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இனப்பிரச்சினையால் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை இலங்கை அரசாங்கமானது பலவந்தமாக மீள் குடியேற்றுவது குறித்து ஐக்கிய நாடுகள் சபை கவலை கொள்கிறது என்று ஐ.நா.உலக உணவுத் திட்டத்தின் ஆசியப் பிராந்திய இயக்குநர் அன்ரனி பான்பரி குற்றம் சாட்டியுள்ளார்.** (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஏறாவூரில் நேற்று மின்மாற்றி தகர்ப்பு

(மட்டக்களப்பு)

ஏறாவூர்-கழுவன்கேணி வீதியில் உள்ள மின்மாற்றியை அடையாளம் தெரியாதோர் தகர்த்துள்ளனர். இச் சம்பவம் நேற்று அதிகாலை 2 மணியளவில் நடந்ததாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அப் பகுதியில் வசிப்பவர் ஒருவர் ஏறாவூர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (ச)

## வெள்ளை வானில் கடத்தப்பட்ட மூவர் சூட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்பு

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா கூமாங்குளம் பகுதியில் நேற்று காலை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மூன்று சடலங்கள் மீட்கப்பட்டன. கண்டெடுக்கப்பட்ட மூன்று சடலங்களும் வவுனியா காத்தார் சின்னக்குளம் பகுதி வீடுகளில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை அடையாளம் தெரியாத ஆயுதபாணிகளினால் வெள்ளை வான் ஒன்றில் கடத்திச் செல்லப்பட்டவர்கள் என இறந்தவர்களின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள இந்த சடலங்களை பார்வையிட்டு விசாரணை நடத்திய வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் இரவு நேரத்தில் பலத்த பாதுகாப்பு மிக்க பிரதேசத்திலிருந்து இந்த மூவரும் கடத்திச் செல்லப்பட்டிருப்பதனால் இப் பிரதேசத்திற்குப் பொறுப்பான தாண்டிக்குளம் மற்றும் கறுவல் புளியங்குளம் இராணுவ முகாம்களின் பொறுப்பதி (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஜோர்தானில் மகத்தான வரவேற்பு

உலக பொருளாதார மாநாடு மற்றும் ஜி11 மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான தூதுக்குழுவினர் இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் ஜோர்தான் குயின் அலியா சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தனர்.

மிஹின் எயார் விசேட விமானத்தில்

றும் வீடமைப்பு அமைச்சர் ஹொஸ்னி அபூ கிஹிடா வரவேற்றதுடன் தூதுக்குழுவினருக்கு விமான நிலையத்தில் மகத்தான வரவேற்று அளிக்கப்பட்டது.

இலங்கை நேரப்படி நேற்று மாலை 3.30 மணியவில் ஜோர்தானில் கிங் ஹுசைன் மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமான உலக பொருளாதார மற்றும் ஜீ 11 மாநாட்டில்

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினை குறித்து பேரவை ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புத் தொடர்பாக நேற்று பல்கலைக்கழக பேரவை கூடி ஆராய்ந்துள்ளது. யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிராக விடுக்கப்பட்ட அச்

ஈடுபட்டு வருகின்றனர்.

இந் நிலையிலேயே நேற்றுக் கூடிய பேரவை மாணவர்களின் பிரச்சினைகளை தீர்த்து பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக ஆராய்ந்துள்ளது. இதேவேளை யாழ்.பல்கலைக்கழக

உலக பொருளாதார மாநாடு மற்றும் ஜி11 மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான தூதுக்குழுவினர் இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் ஜோர்தான் குயின் அலியா சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தனர்.

மிஹின் எயார் விசேட விமானத்தில் சென்றுள்ள ஜனாதிபதி தலைமையிலான குழுவினரை ஜோர்தான் பொதுவேலை மற்றும் வீடமைப்பு அமைச்சர் ஹொஸ்னி அபூ கிஹிடா வரவேற்றதுடன் தூதுக்குழுவினருக்கு விமான நிலையத்தில் மகத்தான வரவேற்று அளிக்கப்பட்டது.

இலங்கை நேரப்படி நேற்று மாலை 3.30 மணியவில் ஜோர்தானில் கிங் ஹுசைன் மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமான உலக பொருளாதார மற்றும் ஜீ 11 மாநாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்றவுள்ளார். (ச)

## பிரச்சினை குறித்து பேரவை ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புத் தொடர்பாக நேற்று பல்கலைக்கழக பேரவை கூடி ஆராய்ந்துள்ளது. யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிராக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் காரணமாக கல்விச் செயற்பாடுகளிலிருந்து மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந் நிலையிலேயே நேற்றுக் கூடிய பேரவை மாணவர்களின் பிரச்சினைகளை தீர்த்து பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக ஆராய்ந்துள்ளது. இதேவேளை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் ஆர்.குமாரவடிவேல் தலைமையிலான (04 ஆம் பக்கம் பார்க்க)

# ஊர்காவற்றுறை மோதலில் இரு புலி உறுப்பினர்கள் பலி

## கடற்படையினர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை கடற் பகுதியில் நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம் பெற்ற மோதலில் இரு விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர்.கொல்லப்பட்ட இருவரும் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.

கடந்த வியாழக்கிழமை மாலை மீன் பிடிக்கச் சென்ற இரு மீனவர்களே நேற்று சடலமாக மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. மீன்பிடிக்கச் சென்ற இருவரையும் காணவில்லையென யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்ட நிலையில் அவர்கள் நேற்று சடலமாக மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஊர்காவற் (04 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தீர்வு யோசனை அடுத்தவாரம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது பிரேரணைகளை அதிகார பூர்வமாக சமர்ப்பிக்கவில்லை.ஆனால் அடுத்த சில தினங்களில் அதனை சமர்ப்பிக்கப்போவதாக சமிக்ஞை காட்டியுள்ளதாக அனைத்துக் கட்சிக் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இவ் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவில் இடம் பெறுகின்ற 13 கட்சிகளில் 10 கட்சிகள் ஏற்கனவே தத்தமது பிரேரணைகளை சமர்ப்பித்தபோது அப் பிரேரணை மற்றைய கட்சிகளுக்கும் பிரதி எடுத்து அனுப்பப்பட்டது.இதேபோன்றுதான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரேரணை சமர்ப்பிக்கும் போதும் நடைபெறும்.

இதில் இன்னும் இரண்டு கட்சிகள் ஜாதிக ஹெல உறுமய (04 ஆம் பக்கம் பார்க்க)

## உடுப்பிட்டி முகாம் மீது துப்பாக்கித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி இராணுவ முகாம் மீது நேற்று துப்பாக்கித் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. சுமார் 15 நிமிடநேரம் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் ஏற்பட்ட சேதம் குறித்து விபரங்கள் எதுவும் வெளியாகவில்லை. இத் தாக்குதலையடுத்து அப் பகுதியில் பாரிய தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. (ச-5)

# காணாமல் போன தமிழக மீனவர்கள் பன்னிரண்டு பேர் நேற்று கரை திரும்பினர்

(சென்னை)

தமிழகம் கன்னியாகுமரியில் இருந்து காணாமல் போன 12 தமிழக மீனவர்களும் கரை திரும்பியுள்ளதாக தமிழகச் செய்திகள் தெரிவித்தன. இவர்களை விடுதலைப்புலிகளே விட்டுச் சென்றதாகவும் கூறப்பட்டது.

கன்னியாகுமரி மீனவர்களில் ஐந்து பேர் நேற்று ராமேஸ்வரம் அருகே உள்ள பிசாத்து முனை கடற்கரைப் பகுதிக்கு வந்து சேர்ந்தனர். இவர்களிடம் விசாரணை நடத்திய பொலிஸார் சென்னைக்கு அழைத்துச் சென்றனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பத்து மீனவர்கள் மற்றும் தூத்துக்குடி, கேரளாவைச் சேர்ந்த தலா ஒரு மீனவர்கள் கடந்த மார்ச் 6 ஆம் திகதி ராமேஸ்வரத்திலிருந்து ஸ்ரீகிருஷ்ணா என்ற படகில் மீன்பிடிக்கச் சென்றனர்.

குறிப்பிட்ட நாட்களுக்கு பின்பும் இவர்கள் கரை திரும்பாததால் மீனவர்களின் குடும்பத்தினர் பதற்றமடைந்தனர். இதனையடுத்து இந்திய கடற்பகுதியில் இவர்களைத் தேடும் பணி நடந்து வந்தது.

இந் நிலையில் (04 ஆம் பக்கம் பார்க்க)

## பிராந்திய அலுவலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் மெதடிஸ்த நிவாரண அபிவிருத்திப் பணிகளின் பிராந்திய அலுவலகத் திறப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு புத்தூர் சென்.லூக்ஸ் மெதடிஸ்த வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இந்நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்ராஸ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். (ச)

## நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட பதிவாளர் காரியாலயத்தினரால் வலி.வடக்கு பிரிவில் நடமாடும் சேவை ஒன்று நடாத்தப்படவுள்ளது. வலி.வடக்கு பிரிவினைச் சேர்ந்த இதுவரை தமது பிள்ளைகளின் பிறப்பினைப் பதிவு செய்யாதவர்களும் மற்றும் இறப்பு, திருமணத்தைப் பதிவு செய்யாதவர்களும் வலி.வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குரிய தத்தமது கிராம அலுவலகர்களை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன் சந்தித்து விபரங்களைப் பெற்று உரிய ஆவணங்களைக் கையளிக்குமாறு வலிகாமம் வடக்கு உதவிப் பிரதேச செயலர் சு.முரளிதரன் அறிவித்துள்ளார். (ச)

## கந்தபுராணப் படன பூர்த்தி விழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் ஆலயத்தில் வருடாந்தம் நடைபெறும் கந்தபுராணப் படனம் பூர்த்தி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிக்கு தங்கப்பொன் ஆசிரியை தலைமையில் ஆரம்பமாகி நடைபெறும். (எ)

## வீரமணி ஐயர் நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் முத்தமிழ் கலாநிதி வீரமணி ஐயர் நினைவுப் பேருரை நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 4மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் 'கான்ல் வரியில் காதலும் காமமும்' என்ற தலைப்பில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் நினைவுப் பேருரையை ஆற்றவுள்ளார். (ச)

## தற்காலிக இணைப்புக் கிடைக்காத ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தல்

(கொழும்பு)

தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் பிறமாவட்டங்களில் தங்கியுள்ள ஆசிரியர்களில் தற்காலிக இணைப்புக் கிடைக்காத ஆசிரியர்களை தன்னுடன் தொடர்புகொள்ளுமாறு கல்வி அமைச்சின் பதில் செயலாளர் தில்லை நடராஜா வலம்புரிக்குத் தெரிவித்தார்.

தற்போதைய அசாதாரண சூழ்நிலையினால் ஏற்பட்ட போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக யாழ்.மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்கள் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு வலயங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்குத் தற்போது தங்கியுள்ள மாவட்டத்தில் தற்காலிக இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் உரிய காரணங்கள் குறிப்பிடப்பட்டும் தற்காலிக இணைப்பு வழங்கப்படாத ஆசிரியர்கள் தனக்கு உரிய ஆவணங்களை அனுப்பி வைக்கும் சந்தர்ப்பத்தில் அவர்களுடைய பிரச்சினை ஆராயப்பட்டு தற்காலிக இணைப்பு வழங்க நடவடிக்கை எடுப்பதாகக் கல்வி அமைச்சின் பதில் செயலாளர் தில்லை நடராஜா வலம்புரிக்குத் தெரிவித்தார். (ச-5)

## ராஜபக்ஷ சகோதரர்கள் மக்களின் வயிற்றில் அடிக்கும் விளையாட்டை மேற்கொள்கின்றனர்

(கொழும்பு)

ராஜபக்ஷ சகோதரர்களின் அரசாங்கம் திறமையற்ற முகாமைத்துவத்தின் காரணமாகவே பொருள்களின் விலை அதிகரித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறுகிய காலப் பகுதிக்குள் பொருள்களின் விலையை அதிகரிக்கச் செய்து சாதனை புரிந்து டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய், எரிவாயு ஆகியவற்றின் விலைகளை அதிகரிக்கச் செய்த ராஜபக்ஷ சகோதரர்களின் அரசாங்கம் அனைத்து பால்மாக்களின் விலைகளையும் ரூ.45-60 வரையான அளவில் கூட்டுவதற்கு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதாகவும் உலக சந்தையில் பொருள்களின் விலை அதிகரித்த போதிலும் அதற்கு இடமளிக்கப்படமாட்டாது என மேடைகளில் வாக்குறுதிகளை வழங்கிய ராஜபக்ஷ அரசாங்கம் சிறந்த நடிப்பை வெளிப்படுத்துவதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

குறைந்த காலப் பகுதிக்குள் விலைகளை அதிகரித்துள்ளதாகவும் ஐக்கியதேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். ராஜபக்ஷ சகோதரர்கள் மக்களின் வயிற்றில் அடிக்கும் வேலையினை நன்கு மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(லங்காதீப - 17.05.2007)

## ஆயிரம் வெற்றிடங்களுக்கு 128 பேர் இணைக்கப்படவுள்ளனர்

நாடு முழுவதிலும் அமைந்துள்ள தபாலகங்களில் இரண்டாம் தரத் தபாலதிபர்களுக்கான வெற்றிடங்கள் ஆயிரம் இருந்தபோதிலும் 128 பேரை மாத்திரமே இணைத்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் அதிகாரிகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன் இதனையடுத்து இந்தப் போட்டிப் பரீட்சை 10 வருடங்களுக்குப் பின்னரே நடக்கும் என அந்தச் சங்கத்தின் செயலாளர் கே.எஸ்.வீரசேகர தெரிவித்தார்.

இம் மாதம் நடைபெறவுள்ள இந்தப் போட்டிப் பரீட்சைக்காக 52 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் இதில் 128 பேர் மாத்திரமே தேர்ந்தெடுக்கப்படவுள்ளதாகவும் அந்தச் சங்கம் தெரிவிக்கின்றது.

(லங்காதீப - 17.05.2007)

## வினைத்திறன் காண் தடைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவமனையின் கீழ் புதிதாக நியமனம் பெற்ற II ஆ பிரிவினைச் சேர்ந்த குடும்பநல மருத்துவ மாதுக்களும் ஏற்கனவே வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடையாத குடும்பநல மருத்துவ மாதுகளுக்குமான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை நாளைக் காலை 8 மணிக்கு யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்கு இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் உடனடியாக விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து அந்தந்த சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினூடாக இன்று நண்பகலுக்கிடையில் பிரதி மாகாண சுகாதார பணிமனைக்கு சமர்ப்பிக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (ச)

## சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை வழங்கப்படவுள்ளது.

[illegible] நன்கொடையைப் பெறுவதற்கான [illegible] பிரதேச சபை எல்லைக்குட்பட்ட [illegible] நிலையங்கள் தங்கள் கூட்டறிக்[illegible] புத்தகம் ஆகியவற்றுடன் [illegible] பிரதேச சபை உப அலுவலகத்[illegible] வரும் 2[illegible] ஆம் திகதிக்கு முன்னர் [illegible] உறுதிப்படுத்துமாறு வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (ச)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சொண்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆனைக்கோட்டை மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் நடாத்தப்படும் கிராம மட்ட அமைப்புகளுக்கான பயிற்சியும் அனர்த்த முகாமைத்துவக் கருத்தரங்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு ஆனைக்கோட்டை துரைஐயா மண்டபத்தில் நடைபெறவுள்து.

இப் பயிற்சிக் கருத்தரங்கிற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மகளிர் சங்க அங்கத்தவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-132)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பேராசிரியர் துரைராஜா நினைவுப் பேருரை நிகழ்வில் கலந்து கொண்ட கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட இயந்திரவியல் துறைத் தலைவர் திருமதி துஷ்யந்தி முகுந்தன், உப பீடாதிபதி பா.தனபாலன் மற்றும் முகிழ்நிலை ஆசிரியர்கள் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

## உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு அடையாள அட்டை

(கொழும்பு)

ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அடுத்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு ஆட்பதிவுத் திணைக்களம் கேட்டுள்ளது.

இவ் அடையாள அட்டைகளைப் பெற விரும்பும் பரீட்சார்த்திகள் இறுதி நேரம் வரை காத்திருக்காமல் முன்கூட்டியே விண்ணப்பிக்குமாறு ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஏ.ஜி.தர்மதாஸ கேட்டுள்ளார்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் கிராம சேவை உத்தியோகஸ்தர் ஊடாகவும் பாடசாலைப் பரீட்சார்த்திகள் அந்தந்தப் பாடசாலை அதிபர்களூடாகவும் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தாம் இம்முறை உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றும் விடயத்தை குறிப்பிட்டு அனுப்பினால் குறித்த அடையாள அட்டைகளை துரிதமாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## மஹோற்சவம்

(பொன்னாலை)

தொல்புரம் - கொட்டியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்மன் தேவஸ்தான மஹோற்சவம் நாளைக் காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 நாள்கள் நடைபெறும்.

30 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ச-49)

## முதுகலைமாணி-2005 பெறுபேறு வெளியாகியது

யாழ்.பல்கலைக்கழகத்தர்ல் யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் நடாத்தப்பட்ட முதுகலைமாணி- 2005 பரீட்சை முடிபுகள் வெளிவந்துள்ளன.

இப் பரீட்சை முடிபுகளைப் பட்டப்பின் படிப்புப் பீடத்தில் பார்வையிடலாம் என யாழ். பல்கலைக்கழக பரீட்சைக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

ஆங்கில ஆசிரியர்களுக்காக யாழ்.பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்ட ஆங்கில டிப்ளோமா பரீட்சை முடிபுகள் வெளிவந்துள்ளன.

இப் பரீட்சைப் பெறுபேறுகளை யாழ். பல் கலைக்கழக ஆங்கிலப் பிரிவில் பார்வையிடலாம். இப் பரீட்சையில் சித்தியடையாதோர் மீள் பரீட்சை சம்பந்தமாக ஆங்கில பரீட்சைத் தலைவருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். (து)

விற்பனைக்கும் வாடகைக்கும்

பருத்தித்துறைவீதி, சாரையடியில் பாவனையிலுள்ள சைக்கிள் உதிரிப்பாக விற்பனை நிலையம் பொருட்களுடன் வாடகைக்கும் Np-Hx Fiero-TVS ரக மோட்டார் சைக்கிள், P III, P IV கணனிகளும் (DVD, VCD, MP3) CDக்களும் உடன் விற்பனைக்கு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- விநாயகர் வாணிடம், சாரையடி, புலோலி தெற்கு, புலோலி.

T.P-021226 3898. (07)

SATS - TECH 7- வது ஆண்டில்...




இதோ! விரல் நுனியில் உலகை உங்கள் வசம் தருகின்றோம். சாதாரண டீவி அன்ரனாவை பொருத்தும்விலைக்கு அண்மையாக சண் டீவி/சண் நியூஸ்/ஜெயா டீவி/பொதிகை, DD Sports, Head Lines Today, DD 1 உட்பட்ட 44 சனல்கள் Digital DVD தரத்துடன் மாதாந்த கட்டணம் எதுவுமின்றி கண்டு களிக்கலாம்.

உத்தரவாதம் நிபந்தனைக்கு உட்பட்டது

KU BAND டிஸ் அன்ரனா சிஸ்டம் உத்தரவாதத்துடன் Rs.9000/=ல் இருந்து

மேலதிக விபரங்களுக்கு:-
SATS-TECH ENGINEERS
இல.182, கே.கே.எஸ். வீதி,
குளப்பிட்டி சேச் அருகில்,
கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

Phone:- (021)222 5908
Hot Line 0777 710785

(c-103)

தவறை சரிப்படுத்திக் கொள்ளப் பிரயாசைப்படுவதால் அவமானம் கிடையாது.

—ராஜாஜி

## சமாதானத்தை வலியுறுத்தி சிங்கள மக்கள் எழுச்சி கொள்ள வேண்டும்

இலங்கை சர்வதேச ரீதியிலும் தனது பெயரை பிசக்கிக் கொண்டு விட்டது. உள்நாட்டுப் பிரச்சினை என்ற போர்வையை மூடிக்கொண்டு உலக நாடுகளின் அழுத்தத்திலிருந்து தப்பித்து வந்த காலம் முடிந்து விட்டது.

சிலரை சில காலம் ஏமாற்றலாம். பலரைப் பல காலம் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எல்லாக் காலத்திலும் ஏமாற்ற முடியாது என்ற பழமொழிக்கு அமைவாக இலங்கை அரசுகள் தமிழர்களுக்கு இழைத்த அநீதிகளை உலக நாடுகள் உணரத் தொடங்கிவிட்டன.

அவ்வாறு உலக நாடுகள் உணர்ந்து கொள்ள ஆரம்பித்ததும் சர்வதேச சமூகத்துடன் கருத்து முரண்பாடடையும் அளவுக்கு நிலைமை மாறி விட்டது.

உலக நாடுகளின் உதவி நமக்குத் தேவையில்லை என்று கூறும் அளவுக்கு சர்வதேசத்திற்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான உறவு நிலை குழப்பமடைந்துள்ளது.

உலக நாடுகளுடன் நல்லுறவைப் பேணுவதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மிகவும் கண்ணும் கருத்துமாகவிருந்தார். வெளிநாடுகளின் உதவியின்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாதென்பது அவரின் நிலைப்பாடாகவிருந்தது.

அதன் காரணமாகவே நோர்வேயின் அனுசரணைப் பணியை அவர் ஏற்றுக் கொண்டார். சமாதான முயற்சிகளுக்கு அனுசரணைப் பணியை ஆற்றுமாறு நோர்வேக்கு அழைப்பு விடுத்ததும் சந்திரிகா குமாரதுங்கவே.

எனினும் அவரின் ஆட்சியில் பிரதமராக இருந்த தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நோர்வேயின் அனுசரணையை அறவே விரும்பவில்லை.

நோர்வே தொடர்பில் ஜே.வி.பி.கொண்டிருந்த அதேநிலைப்பாட்டையே மகிந்த ராஜபக்ஷவும் கொண்டிருந்தார். அதன் உள்ளார்ந்த நிலையை இப்போது ஜனாதிபதியின் உரைகளில் காண முடிகின்றது.

அதற்கு மேலாக இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காணும் எண்ணம் அரசிடம் இல்லை என்பதும் தெட்டத்தெளிவாகின்றது. யுத்தத்தின் வழியில் தீர்வு காண முற்படுவது எத்தனை ஆபத்தானது என்பதையும் அதனால் ஏற்படக் கூடிய அழிவுகளையும் ஆட்சியாளர்கள் சிந்திப்பதாகத் தெரியவில்லை. அத்தகைய சிந்தனையில் அவர்கள் அக்கறை கொள்வதாகவும் இல்லை.

எனவே இது விடயத்தில் சிங்கள மக்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

சமாதான வழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு அரசையும் ஜனாதிபதியையும் வலியுறுத்தும் பொறுப்பும், அதிகாரமும் சிங்கள மக்களுக்குண்டு.

இதுவிடயத்தில் சிங்கள மக்கள் மௌனமாக இருக்கும் ஒவ்வொரு கணப்பொழுதும் யுத்தம் என்னும் தாழமுக்கம் இலங்கையில் வேகம் எடுக்கின்றது.

அதனை ஆரம்பத்திலேயே ஒழிக்காவிடில் அதனால் ஏற்படும் இழப்பு பாரதூரமானதாக வேயிருக்கும்.

# தற்காலிக இணைப்புப் பெற்றுள்ள ஆசிரியர்கள் சம்பளம் பெற வசதி

தற்காலிக இணைப்புப் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கு தற்போது கடமைபுரியும் பாடசாலை அதிபருடாக சம்பளக் கொடுப்பனவுகளை வழங்குமாறு கல்விஅமைச்சின் பதில் செயலாளர் எஸ்.தில்லை நடராஜா கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம், தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம்,தீவகம் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு வலயங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள்தற்போதுஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் போக்குவரத்துப் பிரச்சினையைக் கருத்தில் கொண்டு அவர்கள் தங்கியுள்ள இடங்களில் தற்காலிக இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தற்காலிக இணைப்பைப்பெற்ற ஆசிரியர்கள் தமது சம்பளக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட சிரமங்களைக் கருத்தில் கொண்டே தாம் இவ்வறிவித்தல்களை வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்காலிக இணைப்பைப் பெற்றுள்ள ஆசிரியர்கள் தற்போது பணியாற்றும் பாடசாலை அதிபரின் பரிந்துரைக் கடிதத்தினைத் தாம் நிரந்தரமாகப் பணியாற்றும் பாடசாலை அமைந்துள்ள வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இக் கடிதத்தின் பிரகாரம் அவ் வலயக் கல்விப் பணிப்பாளர் குறித்த ஆசிரியர்களுக்குரிய சம்பளக் கொடுப்பனவை தற்காலிக இணைப்புப் பெற்றுப் பணிபுரியும் பாடசாலை அதிபருக்கு அனுப்பி வைப்பார் எனவும் கல்வி அமைச்சின் பதில் செயலாளர் எஸ்.தில்லை நடராஜா தெரிவித்தார்.(ச–5)

# நாட்டில் அரசாங்கம் இருக்கின்றதா? ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி

மக்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்த எதிர்கொள்கின்ற துன்பங்களைப் பார்க்கும் போது நாட்டில் அரசாங்கம் ஒன்று இருக்கின்றதா? என்ற கேள்வி எழுகின்றது. நாட்டைக் கொண்டு நடாத்த முடியாவிட்டால் பொறுப்புக்களை எம்மிடம் ஒப்படைத்து விட்டு வீடு செல்லுமாறு இந்த அரசாங்கத்தைக் கோருகின்றோம்.

நாட்டைத் துரிதகதியில் அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் எம்மிடம் இருக்கின்றன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

பொருள்களின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்றன. அனைத்து விடயங்களுக்கும் அரசாங்கம் சர்வதேச சந்தையில் ஏற்படுகின்ற எண்ணெய் விலை உயர்வையும் யுத்தத்தையுமே காரணம் காட்டுகின்றது.

எந்தவிதமான திட்டங்களுமற்ற அரசாங்கமே தற்போது ஆட்சியிலுள்ளது என்றும் அவர் கூறினார். கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறுகையில்;

அரசாங்கம் பொய்களைக் கூறுவதையே அன்றாடக் கடமையாகக் கொண்டுள்ளது. வாழ்க்கைச் செலவு உயர்ந்து கொண்டு செல்கின்றது. ஆனால் அதனைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் யுத்தத்தைப் பற்றிப் பேசுகின்றது.

யுத்தம் என்ற விடயத்தினால் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளும் மறைக்கப்பட்டு வருகின்றன. சுதந்திரக் கட்சியின் தலைமையிலான அரசாங்கத்தைப் பதவிக்குக் கொண்டு வந்த ஜே.வி.பியும் நாட்டின் தற்போதைய நிலைமைக்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

ஜே.வி.பியினர் ஏன் தற்போது லிப்ரன் சுற்றுவட்டத்தை வாடகைக்கு எடுப்பதில்லை என்று விமல் வீரவன்சவிடம் கேட்கிறோம். போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்படுமா? என்று மக்கள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் அரசாங்கம் ஜூன் மாதமா? ஜூலை மாதமா? போக்குவரத்துக் கட்டணங்களை அதிகரிப்பது என்று விவாதித்துக் கொண்டிருக்கின்றது. பால்மாவின் விலையும் மின்சாரக் கட்டணங்களும் விரைவில் அதிகரிக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.காஸ் விலை அதிகரித்துள்ளது. முத்திரை வரியை அதிகரிக்கப் போவதாக தபால்துறை அமைச்சர் ஹக்கீம் பயமுறுத்துகிறார்.

இந்நிலையில் மக்கள் எவ்வாறு வாழ்க்கையைக் கொண்டு நடத்துவார்கள் என்று அரசாங்கம் சிந்திப்பதாகத் தெரியவில்லை. அரசு ஊழியர்களுக்கான சம்பளம் செலுத்துவதற்கு அரசாங்கத்திடம் நிதியில்லை. ஆனால் மிஹின் ஏயார் விமான நிறுவனத்திற்கு இன்னுமொரு விமானம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு எங்கிருந்து நிதி கிடைத்தது என்று கேள்வியை எழுப்புகின்றோம்.

நாட்டின் பண வீக்கம் 21 சத வீதமாக அதிகரித்திருக்கின்றது. ஆனால் எண்ணெய் விலைப் பிரச்சினை இருக்கின்ற சிங்கப்பூரில் கூட 1.5சதவீதமாகவே பண வீக்கம் உள்ளது என்றார். (ச–5)

# எதிர்க்கட்சித் தலைவர் ரணில் பொறுப்புடன் செயற்படவில்லை

## அமைச்சர் டலஸ் அழகப்பெருமா. சாடல்

(கொழும்பு)

கோமாளிகள் இலங்கையின் தலைவர்களாக வரமுடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவை அமைச்சர் டலஸ் அழகப்பெருமா சாடியுள்ளார்.

காலி அக்மீமனையில் அண்மையில் நடைபெற்ற சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் டலஸ் அழகப்பெருமா இதனைத் தெரிவித்துள்ளார்.எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொறுப்புடன் செயற்படவில்லை. அரசியல் நாகரிகம் இன்றி பயனற்றசெயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார். அரசியல் நாகரிகமின்றி செயற்பட்ட தலைவர்களை மக்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

ரணில் விக்கிரமசிங்க செய்து கொண்ட உடன்படிக்கையால் புலிகள் தனியான காவல் பிரிவையும் நீதிமன்றத்தையும் அமைக்கவும் பண நோட்டுக்களை அச்சிடவும் வழி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

அ[illegible] நேரம் வடக்குக் கிழக்கில் பண நோட்டுக்களை வெ[illegible]டும் வங்கிகள் இல்லை. யுத்தத்தைக் காரணம் காட்டி பணம் சம்பாதித்த இராணுவ அதிகாரிகளுமில்லை. இன்று இராணுவத்தினர் யுத்தத்தை யுத்தமாகச் செய்து வெற்றியீட்டி வருகின்றனர்.

இந் நாட்டில் தலைமைத்துவத்திற்குப் பண்டார நாயக்கர்கள், ராஜபக்ஷர்கள் மட்டுமே வர வேண்டும் என்ற காலம் மலையேறிவிட்டது. குடும்ப அரசியல் ஆதிக்கம் இல்லாது ஒழிந்து விட்டது. எவரும் இந்த நாட்டின் தலைவராக வரமுடியும். ஆனால் மக்களின் ஆதரவை அவர்கள் பெற வேண்டும். ஆனால் கோமாளிகள் நாட்டின் தலைவர்களாக வர முடியாது. அவர்களைத் தங்கள் தலைவர்களாக ஏற்றுக் கொள்ளவும் மக்கள் தயாராகவில்லை என்றார் அவர். (ச–5)

# சுதந்திரக் கட்சியின் தீர்வு யோசனை அமைதி முயற்சியை சீரழித்துள்ளது

## முன்னாள் இராணுவத் தளபதி ஹரிகரன் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் கூட்டாட்சிக் கோட்பாடும் அமைதி முயற்சிகளும் மகிந்த ராஜபக்ஷவின் சுதந்திரக் கட்சி முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தின் மூலம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளதாக இந்தியாவின் ஓய்வு பெற்ற இராணுவத் தளபதி கேணல் ஹரிகரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அமைதிப் படை நிலைகொண்டிருந்த போது அதன் புலனாய்வுப் பிரிவுத் தலைவராகச்செயற்பட்ட ஹரிகரன், இணையத்தளம்ஒன்றில்எழுதியுள்ள கட்டுரையின் தமிழ் வடிவம் வருமாறு,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தலைவராகக்கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியானது இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவுக்கு அனுப்பியுள்ளது.

கடந்த மே முதலாம் திகதி பொதுமக்களின் விவாதத்திற்காக வெளியிடப்பட்ட இந்தத் தீர்வுத் திட்டமானது மே 14 ஆம் திகதி சுதந்திரக் கட்சியின் நிர்வாகக் குழுவில் விவாதிக்கப்பட்டது.

அதன் பின்னர் ஒற்றையாட்சியின் கீழான தீர்வுத் திட்டத்தை அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு சுதந்திரக் கட்சி அனுப்பியது.

மகிந்தவின் சிந்தனையான பிளவுபடாத நாடு, இலங்கையின் ஒருமித்த கருத்துருவாக்கம் மற்றும் கௌரவமான நீதியின் அடிப்படையில் இத் தீர்வுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத் தீர்வுத் திட்டமானது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கும்.

மாகாணங்களை ஒழித்துக் கட்டி மாவட்ட சபைகளுடே அதிகாரப் பகிர்வு. பிரதேச மற்றும் கிராம சபைகளை மாநகரம் மற்றும் கிராம நிலைகளில் உருவாக்கல் ஆகியவற்றைக் கொண்டது.

நாடாளுமன்றில் பெரும்பான்மை பெற்ற சுதந்திரக் கட்சி தான் கூட்டணிக்கு தலைமை வகிக்கின்றது. அதிகாரப் பகிர்வுக்கான இறுதித்திட்டமானது சுதந்திரக் கட்சியின் திட்டத்தை ஒத்த நிலையில் இருக்கக் கூடும்.

சுதந்திரக் கட்சி முன்வைத்துள்ள திட்டமானது இனப்பிரச்சினையின் மூன்று முக்கிய அடிப்படைக் காரணிகளான,

தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளில் தன்னாட்சி, வடக்குக் கிழக்கு இணைப்பு, சிங்கள மொழிக்கு இணையாக தமிழ் மொழிக்குத் தகுதி நிலை ஆகியவற்றைப் புறக்கணித்துள்ளது என அவர் கூறினார். (ச–5)

# அதிகாரப்பகிர்வின் அடிப்படையில் பிரச்சினையை தீர்க்க முடியாது

## ஜே.வி.பி.அறிவிப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்துள்ள இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான யோசனை மகிந்த சிந்தனையை மீறியுள்ளது. இந்நிலையில் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவினால் முன்வைக்கப்படும் தீர்வுயோசனையும் மகிந்த சிந்தனையை முழுமையாக மீறிவிடுகின்ற அபாயமுள்ளது.

ஆனால் அவ்வாறானதொரு தீர்வு யோசனையை அமுல்படுத்த ஜே.வி.பி. ஒரு போதும் இடமளிக்காது என்று அக்கட்சியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

வாழ்க்கைச் செலவு மின்னல் வேகத்தில் உயர்ந்து கொண்டு செல்கின்றது. அதனை கட்டுப்படுத்த அரசாங்கம் ஆரோக்கியமான நடவடிக்கைகளை எடுப்பதாகத் தெரியவில்லை.

எனவே வாழ்க்கைச் செலவு உயர்வை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி மக்களையும் இணைத்துக்கொண்டு விரைவில் வீதியிலிறங்கி போராடப்போவதாகவும் அவர் கூறினார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யோசனைகள் விரைவில் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவுக்கு கையளிப்படவுள்ளமை குறித்து கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது, சிறிலங்கா சுதந்திரக் கட்சி சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவுக்கு சமர்ப்பிக்கவுள்ள தீர்வுயோசனைகள் முழுமையாக மகிந்த சிந்தனையை மீறியுள்ளன. மகிந்த சிந்தனையில் எந்தவொரு இடத்திலும் அதிகாரப்பகிர்வு குறித்து குறிப்பிடவில்லை.

ஆனால் சுதந்திரக் கட்சியின் தீர்வுயோசனையில் அதிகாரப்பகிர்வு என்ற விடயம் காணப்படுகின்றது. கடந்த 2005 ஆம் ஆண்டு மக்களால் வழங்கப்பட்ட ஆணையை மீறுவதற்கு யாருக்கும் உரிமையில்லை. ஆனால் தீர்வுயோசனை என்ற பெயரில் அரசாங்கம் மகிந்த சிந்தனையை மீறியுள்ளது.

இந் நிலையில் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவினால் முன்வைக்கப்படும் இறுதியோசனையும் மகிந்த சிந்தனையை மீறிவிடும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. இருப்பினும் அதிகாரப்பகிர்வின் அடிப்படையில் அமைந்த எந்தவிதமான யோசனையையும் நாட்டில் அமுல்படுத்த ஜே.வி.பி. இடமளிக்காது.

அதனை எதிர்த்து போராடுவோம். சர்வ கட்சி பிரதிநிதிகள் குழு மூலம் அதிகாரப்பகிர்வின் அடிப்படையில் அமைந்த யோசனை முன்வைக்கப்பட்டால் அதனை தோற்கடிக்க முடியுமானவரை போராடுவோம்.

அதிகாரப்பகிர்வின் அடிப்படையில் இந்த நாட்டின் பிரச்சினையை ஒரு போதும் தீர்க்க முடியாது. அதிகாரப்பகிர்வின் அடிப்படையிலான யோசனைகள் அமுல்படுத்தப்பட்டால் அது இந்த நாட்டில் வீண் பிரச்சினைகளை உருவாக்கும் என்றார். (ச-5)

## ஊரடங்கு நேரம் தளர்வு

(யாழ்ப்பாணம்)

இரவு நேரங்களில் பொலிஸாரினால் பிறப்பிக்கப்படும் ஊரடங்கு நேரம் ஒரு மணித்தியாலத்தால் குறைக்கப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இரவு 8 மணிமுதல் அதிகாலை 4 மணி வரையும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் இரவு 7 மணி முதல் அதிகாலை 4 மணிவரையும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தொப்பிக்கல மோதலில் ஐந்து புலிகள் பலி

மட்டக்களப்பு மாவட்டத்தின் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான தொப்பிக்கல காட்டுப் பகுதியில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவத்தின் போது ஐந்து இளைஞர்கள் பலியாகியுள்ளதாக படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் வேளையில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவத்தின்போது பலியான இளைஞர்கள் ஐந்து பேரும் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் என படையினர் தெரிவித்தனர். (ச)

## ஊர்காவற்றுறை...

றுறையைச் சேர்ந்த ஞான ரூபன் றெசான் (வயது 18), றொபேர்ட் தேவ தாஸ் (வயது 32) ஆகிய இருவருமே நேற்று துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டவர்களாவர்.

இச் சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிட்ட ஊர்காவற்றுறை நீதிவான் ஜெயராமன் றொக்ஸி பிரேதபரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். ஊர்காவற்றுறை பொலிஸாரினால் சடலம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (ச-3,5)

## காணாமல் போன...

தூத்துக்குடியில் மரியா என்ற படகில் நின்று கொண்டிருந்த கடற் புலிகள் ஆறு பேரை இந்தியக் கடற்படை யினர் பிடித்து தமிழகப் பொலிஸ் துறையினரிடம் ஒப்படைத்தனர். இவர்களிடம் கியூப் பிராஞ் பொலிஸார் நடத்திய விசாரணையில் பிடிபட்ட ஆறு பேரும் கடற்புலிகள் என்பதும் தெரியவந்தது.

தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில் காணாமல் போன கன்னியா குமரி மீனவர்கள் 12 பேரும் விடுதலைப்புலிகளின் சிறையில் இருப்பதாக கூறினர். மீனவர்கள் காணாமல் போனமை தொடர்பாக தமிழக காவல் துறை விடுதலைப்புலிகள் மீது குற்றஞ்சாட்டியிருந்தது.

ஆனால் விடுதலைப்புலிகள் அரசியல் துறை இதனை முற்றாக நிராகரித்திருந்தது. இந் நிலையில் மீனவர்கள் கரைதிரும்பியுள்ளனர். (ச-3,5)

# மாணவர்களின் கல்விச் செயற்பாடு குறித்து கூட்டமைப்பு-பிரதிக் கல்வி அமைச்சர் பேச்சு

## 22 ஆம் திகதி இடம் பெறும்

யாழ்.குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளினால் கல்விச் செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புத் தொடர்பாகவும் அதனை நிவர்த்தி செய்வதற்குமான நடவடிக்கைகளை எடுப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை எதிர்வரும் 22 ஆம் திகதி தாம் சந்திக்கவுள்ளதாக பிரதிக்கல்வியமைச்சர் எஸ்.சச்சிதானந்தன் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

யாழில் கடந்த சில வாரங்களாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பாக தாம் ஊடகங்களின் செய்திகள் மூலம் அறிந்துள்ளதாகவும் எனினும் இப் பிரச்சினைகளை பாதுகாப்பு காரணங்களால் நேரில் வந்து ஆராய முடியாதுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாகவே தாம் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து யாழ்.மாணவர்களின் பிரச்சினை தொடர்பாக கேட்டறிந்து அதற்கான தீர்வுகளை வழங்க ஏற்பாடு செய்துள்ளதாகவும் எஸ்.சச்சிதானந்தன் மேலும் கூறினார். (ச-5)

## சிறிலங்கா சுதந்திரக்கட்சியின்...

மற்றும் தோட்டத் தொழி லாளர் காங்கிரஸ் ஆகியவை இன்னமும் தம்முடைய பிரேரணையை சமர்ப்பிக்க வில்லை. அவை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பிரே ணையை பார்த்துவிட்டு தங்களுடைய கருத்துக்களை கூறுவதாகக் கூறியுள்ளன. இது நடை பெற்றவுடன் எங்களுடைய விவா தங்களை மீண்டும் தொடரலாமென நம்புவதாக அவர் குறிப்பிட்டார்.

விவாதங்களை இரண்டு மாதங்களுக்குள் முடிக்க வேண்டுமென அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் பிரதிநிதிகளிடம் கூறியிருக்கிறேன். ஆனால் விவாதம் எப்போது நடைபெறும் என்று தன்னால் கூற முடியாதுள்ளதாகவும் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இவ் அறிக்கை ஜனாதிபதி தலைமையிலான அனைத்துக் கட்சி மாநாட்டில் முன்வைக்கப்படும். ஜனாதிபதி ஏற்கனவே இந்த அறிக்கை தான் அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு ஓர் அடிப்படையாக இருக்குமென கூறிய திஸ்ஸ விதாரண இந்த அறிக்கை மீது என்ன செய்யவேண்டுமென்பது குறித்து ஜனாதிபதிதான் முடிபு செய்யுவேண்டும் என்றார் அவர்.

ஒவ்வொரு பிரிவின் மீதான விவாதத்தின் மீதும் அதிக பட்ச அளவு கருத்தொற்றுமையை எட்டமுனைய வேண்டுமென்ற நிலையை எடுத்திருக்கிறேன். ஆனால் குறைந்த பட்ச கருத்தொற்றுமை என்பது இரண்டு பிரதான கட்சிகளின், அதாவது சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவற்றின் ஒப்புதல் பெறப்படுவது அவசியம் என்ற நிலையைத் தான் எடுத்துள்ளதாகவும் அந்த கட்சிகள் உடன்படா விட்டால் அது கருத்தொற்றுமையாகாது.

எனவே இவ்விரு கட்சிகளின் ஒப்புதல்களையும் மேலும் எந்தளவுக்கு முடியுமோ அந்தளவுக்கு ஏனையகட்சிகளின் ஒப்புதல்களையும் பெறவுள்ளேன் என்றார். (ச-3)


## தொண்டர் லிகிதர் விண்ணப்பம்

மேற்படி வெற்றிடத்திற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க தொண்டர்களை அவரவர் பிரிவுத் தலைவர்களினூடாக விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நேர்முகப்பரீட்சை 26.05.2007 (சனிக்கிழமை) காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களுடன் நேர்முகப்பரீட்சை, எழுத்துப் பரீட்சைக்கு ஆயத்தமாக கிளை அலுவலகத்திற்கு வரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,**
**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,**
**இல.73,கண்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-111)

## Hatton National Bank

### அடகுப் பொருட்களை ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 15.03.2006 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுப் பொருட்கள் 26.05.2007 சனிக்கிழமை அன்று இல.62,64, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருட்களை உடனே மீட்க முடியாவிட்டால்,

❖ கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி,

அல்லது

❖ தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருட்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

-முகாமையாளர்.

(சி-110)


## வெள்ளை வானில்...

காரிகளை வவுனியா நீதிமன்றத் தில் மரண விசாரணையின் போது சாட்சிகளாக ஆஜர் செய்யுமாறு வவுனியா பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை ஓமந்தைக்கு மேற்கே இரா ணுவ முன்னரங்கப் பகுதிகளில் இராணுவத் தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடை யில் கடந்த மூன்று தினங்களாக இடம் பெற் றதாகத் தெரிவிக்கப்படும் வெவ்வேறு மோதல் சம்பவங்களில் கொல்லப்பட்டதாகத் தெரிவித்து பொலிஸாரின் ஊடாக வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்த 9சடலங்களையும் விடுதலைப்புலிகள் உரிமைகோரியிருந் ததையடுத்து நீதிமன்ற உத்தரவுக்கமைய அவற்றை சர்வதேச செஞ் சிலுவைக் குழுவினரின் ஊடாக விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்கு நடவடிக் கை எடுத்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-3,5)

## யாழ்...

குழு யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திர சிறியை சந்தித்து பல்கலைக்கழக மாணவர்களிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் குறித்து எடுத்துரைத்ததுடன் அவர்களின் கல்விச் செயற்பாடுகள் குழப்பமின்றி நடைபெறுவதற்கான சூழலை ஏற்படுத்துமாறு வலியுறுத்தியுள்ளனர். (ச-5)

## இடம் பெயர்ந்த மக்களை...

இலங்கைக்கு வருகை தந்துள்ள அவர் இதனைத் தெரிவித்துள்ளார். உணவுப் பொருட்களின் கையிருப்பானது எதிர்வரும் சில வாரங்களுக்குத்தான் உள்ளது. சில பொருட்களின் தன்மையானது மோசமடைந்துள்ளது. மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடை யேயான மோதலால் உதவி வழங்குநர்களும் கவலை யடைந்துள்ளனர். இரு தரப்பினரும் உணவுத் திட்டத்தின் உதவியை திசை திருப்புவது கவலைக்குரியது.

இருந்தபோதும் இடம் பெயர்ந்த மக்களை அரசாங்கம் வலுவில் மீளக்குடியேற்றுவதாக தகவல்கள் வெளியாகி இருப்பது குறித்து ஐக்கிய நாடுகள் சபை கவலை கொள்கிறது.

எதிர்வரும் 6 மாதங்களுக்கு 10.7 மில்லி யன் அமெரிக்க டொலர் மேலதிகமான நிதி தேவை. தற்போதுள்ள கையிருப்பானது ஜூன் மாதம் நடுப்பகுதி வரைதான் இருக்கும்.

உதவி வழங்குநர்களை நாம் சந்தித்த போது சில கேள்விகளை முன்வைக்கின்றனர். உங்களது உணவு உதவியானது பாதிக்கப்பட்ட மக்களுக்குத்தான் சென்றடை கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? அந்த உணவு பொருட்கள் சில தரப்பினரால் திருடப்படவில்லை என்றும் இராணுவத்துக்கு திருப்பிவிடப்பட்டது என்பதையும் அறிவீர்க ளா? உதவி வழங்குநகர்களின் இந்த வருத்தம் நியாயமானதுதான்.

இலங்கை மறுவாழ்வு அமைச்சர் மீளக் குடியேறியோருக்கு 3 மாதங்களுக்கு உணவுப் பொருட்கள் உதவி வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். அரசாங்கமும் முன்வைக்கின்ற வேண்டுகோளுக்கு முன்னுரிமை அளித்து உதவ உலக உணவுத் திட்டம் தயாராக உள்ளது.

இருந்தபோதும் தானாக மீளக் குடியேறு வோருக்குத்தான் எமது உதவிகள் வழங்கப் படும். சொந்த நலன்களுக்காக எந்த ஒரு தரப்பும் மீளக் குடியேற்றம் செய்தால் எங் களால் உதவ முடியாது என்றார் பான்பரி. (ச-5)

## இலங்கை...

லுள்ள சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றை எட்டுவதற்கான நடவடிக்கைகளில் அர்ப்பணிப்புடன் ஐக்கிய தேசிய கட்சி ஈடுபட்டு வருவதாக எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க இச் சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

சீனாவிற்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது குழுவினரும் நேற்று பகல் இலங்கை திரும்பினர். (ச-3)

## இரண்டாவது...

தரப்பினர் கூறியுள்ளனர்.

மேலதிக சிகிச்சைக்காக 46 நோயாளர்கள் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்க முடியாதுள்ளதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது. வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பப்படவுள்ளர்களில் கர்ப்பிணித் தாய்மார், சிசுக்கள் மற்றும் 12 வயதுக்குட் பட்ட வர்கள் ஆகியோர் அடங்கியுள்ளனர். இந் நோயாளிகளில் 11 பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது. (ச-3)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.05.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.